செ.வெ.எண். 13 நாள்: 05.09.2017

**<u>இந்திய சுதந்திர போராட்ட வீரர் வ.உ.சிதம்பரனார் அவர்களின் பிறந்தநாளையொட்டி தமிழக அரசு மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப, அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.</u>**

திருநெல்வேலி மாநகராட்சி பொருட்காட்சி மைதானத்திலுள்ள வ.உ.சிதம்பரனார் அவர்களின் மணிமண்டபத்தில், சுதந்திர போராட்ட வீரர் செக்கிழுத்த செம்மல், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனாரின் பிறந்த நாளான இன்று (05.09.2017) அவரது திருவுருவச்சிலைக்கு தமிழக அரசு மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.முத்துராமலிங்கம், திருநெல்வேலி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.மைதிலி ஆகியோரும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

இந்நிகழ்ச்சியில், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.சு.ஜெகவீரபாண்டியன், உதவி செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) திரு.வெ.சீனிவாசன், திருநெல்வேலி வட்டாட்சியர் திரு.கணேசன் மற்றும் பல அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு :** செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி